வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி (பொ) அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.4119/அ3/2025, நாள். 19.09.2025

----

பொருள் : பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – அரசு/ நகராட்சி / மாதிரி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் – 01.08.2025 அன்றைய நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் நிர்ணயம் செய்ய ஏதுவாக விவரங்கள் கோரியது – ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்பட்டு 2025-2026ஆம் கல்வியாண்டில் பட்டதாரி ஆசிரியர்கள் பணியில் சேர்ந்த 43 பள்ளிகளில் திருத்திய விவரங்கள் சமர்ப்பிக்க கோருதல் – தொடர்பாக.

பார்வை : தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், ந.க.எண்.050530/சி3/இ1/2025, நாள்.05.08.2025.

•••••

வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வகை அரசு/நகராட்சி/மாதிரி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 01.08.2025 அன்றைய நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் நிர்ணயம் செய்ய ஏதுவாக இவ்வலுவலக 14.08.2025 நாளிட்ட செயல்முறைகளின்படி விவரங்கள் பெறப்பட்டது. 2025-2026ஆம் கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் வேலூர் மாவட்டத்திலுள்ள இணைப்பிலுள்ள 43 அரசு/நகரவை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள காலிப்பணியிடங்கள் நிரப்பபட்டதைத் தொடர்ந்து சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள படிவங்கள் 2, 3 மற்றும் 4 ஆகிய படிவங்களை பூர்த்தி செய்து **அளவுகோல் பதிவேட்டின் நகலுடன் 22.09.2025அன்று** (திங்கட்கிழமை) மாலை 04.00 மணிக்குள் இளநிலை உதவியாளர்/ உதவியாளர் மூலமாக இவ்வலுவலகத்தில் நேரில் சமர்ப்பிக்குமாறு கீழ்காணும் (43 பள்ளிகள் மட்டும்) பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இணைப்பிலுள்ள படிவங்களை பூர்த்தி செய்து அதன் **மென்நகல் (Soft Copy) மற்றும் பள்ளியின் Post Occupancy Report (Downloaded Copy)** ஆகியவற்றை a3sec24velloreceo@gmail.com என்ற **email முகவரிக்கு அனுப்புமாறு** (**பட்டதாரி பணியிட நிர்ணய படிவங்கள் 2, 3 மற்றும் 4**) அனைத்து வகை அரசு/நகராட்சி/மாதிரி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**// ஒப்பம் //**
முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

இணைப்பு – 43 பள்ளிகளின் பெயர்ப்பட்டியல் மற்றும்
படிவங்கள் 2 , 3 மற்றும் 4

பெறுநர்
சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்
அரசு/நகரவை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.